மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. செழியன்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்ட மாவட்டமான பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டந்தான் மிகவும் பின்தங்கிய பகுதி. இங்கு ஆண்கள், பெண்கள் படிப்பதற்கு தொழில் நுட்பக் கல்லூரியோ வேறு எந்தக் கல்லூரியோ இல்லை. எனவே, பயிலுகின்ற மாணவ மாணவிகள் ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அரியலூருக்கும், 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருச்சிக்கும், 45 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சேலம் மாவட்டம், ஆத்தூருக்கும் சென்று பயிலுவதற்கு மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, திருக்கோயில்களின் திருவாசகமாக திகழ்ந்து கொண்டு இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், அங்கே அரசு பெண்கள் கலைக் கல்லூரி ஒன்றை வருகின்ற நிதியாண்டில் நிறுவ முடியுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, அங்கே இருக்கின்ற மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும், அடுத்த ஆண்டினுடைய நிதிநிலையின் அடிப்படையிலும் இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

56—

பீடித் தொழிலாளர் நலன் காக்க நிறுவனம் அமைத்தல்

*39586-**திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பீடித் தொழிலாளர்களின் நலன்களைக் காக்க ஒரு நிறுவனத்தை அமைக்க அரசு முன்வருமா?

1995 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர்களின் நலன்களைக் காக்க நிறுவனம் (Corporation) ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லட்சக்கணக்கிலே பீடித் தொழிலாளர்கள் மிகவும் ஏழைகளாக, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளார்கள். இவர்களுக்குக் கூலி, போனஸ் போன்றவைகளைத் தங்கத் தலைவியின் அரசு நிர்ணயித்து இருந்தாலும் அதை அவர்களுக்கு முதலாளிகள் வழங்குவது கிடையாது. இவர்களுக்குக் குடும்பநல நிதியும், சமூக நல நிதியும் கிடைப்பதில்லை. பீடித் தொழிலாளர்கள், தமிழகம் முழுவதும் உள்ள நகரங்களிலே தொழில் செய்கிறார்கள். இவர்கள் தங்குவதற்குக்கூட இடம் இல்லை. காச நோயால் வாடும் இவர்களுக்கு மருத்துவ வசதிக்குக்கூட வழியில்லை. பண்டிகை நாட்களில் உதவித்தொகையோ, போனஸோ முதலாளிகள் வழங்குவதில்லை. ஆகவே, இவர்களுடைய குறைகளைத் தீர்க்க, பீடித் தொழிலாளர்களின் நலன்களைக் காக்க, அவர்களுடைய குறைகளை எடுத்துச்சொல்ல, இவர்களுடைய நலன் காக்கும் தனி நிறுவனம் ஒன்றை அமைக்கும் உத்தேசம், தங்கத் தலைவியினுடைய அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, பீடித் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் இந்தச் சட்ட விதிகளை மட்டும் அமல்படுத்திட 8 தொழிலாளர் உதவி ஆய்வாளர்களை நியமித்து உள்ளது இந்தத் தொழிலாளர் ஆய்வாளர்கள் அங்குள்ள தொழிலாளர்கள் பிரச்சினையில் தலையிட்டு சமரசம் செய்து வைக்கின்றனர். மேலும், அங்கிருக்கின்ற பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. செ.து. வரதராஜன்.

[1995 நவம்பர் 8

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத காலங்களில் மீனவர்களுக்கு அளிப்பதைப்போல, ஒரு தொகையைப் பெற்று, மாநில அரசு ஒரு தொகையும், மத்திய அரசு ஒரு தொகையும் சேர்த்து அளித்தால் பீடித் தொழிலாளர்களுக்கு உதவியாக இருக்கும். ஏழைகளாக இருக்கும் இவர்களுக்கு, அரிஜனங்களுக்கு, மீனவர்களுக்கு, நெசவாளர்களுக்கு, முடி திருத்துபவர்களுக்கு, சலவைத் தொழிலாளர்களுக்கு, இருளர்களுக்கு, நரிக்குறவர்களுக்கு நம்முடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே குரூப் ஹவுஸ் கட்டிக் கொடுக்கிறார்கள். அதைப்போல இந்தப் பீடித் தொழிலாளர்களுக்கும் குரூப் ஹவுஸ் கட்டுகின்ற ஒரு திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்குத் தமிழகத்தில் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஏறத்தாழ 1000 வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிலும், குறிப்பாக மேலப்பாளையம் கிராமத்தில் 500 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த வீட்டின் மதிப்பு ரூபாய் 22000 ஆகும். மத்திய அரசு 9,000 ரூபாய் உதவித்தொகையும், மாநில அரசு ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக 13,000 ரூபாய் கடனாகவும் அளிக்கப்பட்டு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 57, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

57—

நாகப்பட்டினத்தில் சோடியம் மற்றும் மெர்க்குரி விளக்குகள்

*10197-திரு. ஆர். கோடிமாரி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் தலைநகரான நாகப்பட்டினத்திற்கு சோடியம் மற்றும் மெர்க்குரி விளக்குகளைப் பொருத்த அரசிடம் திட்டம் உள்ளதா?